175447

உலகம் புகழும்

உத்தம மாதர்

Y'15wx
N31
175447

829

THE

World-Renowned Women

BOOK II

7-NOV 1931

K. MUNUSWAMI NAIDU & CO,
PUBLISHERS & BOOK SELLERS
286, ESPLANADE, MADRAS.

All Rights Reserved] [Price 3 As.

Y15wx
N31
175447

உ

முருகவேள் துணை.

உலகம் புகழும்

உத்தம மாதர்.

(இரண்டாம் பகுதி)

கே. முனிசாமி நாயுடு அண்டு கம்பனி,
புத்தக வியாபாரிகள்,
286, எஸ்பிளநேட், சென்னை.

காபிரைட்] [விலை அணு 3

ALL RIGHTS RESERVED BY THE PUBLISHERS.

2884
894·8113
175447

7-NOV 1931

முகவுரை.

இந்த இரண்டாம் பகுதியில் உள்ள கதைகள் இரண்டும் முற்பகுதியில் உள்ள கதைகளைப் போலவே சரித்திர சம்பந்தமானவை. கற்றோரும் மற்றோரும் சுலபமாய் வாசித்துணர எளிய நடையில் எழுதப் பெற்றவை.

முதன் முதல் மகோன்னத பதவியில் இருந்து நாளடைவில் விதியின் வசப்பட்டு வீழ்நிலை அடைந்து வெட்டுண்டு இறந்த இரண்டு இராணிகளின் ஜீவிய சரித்திரத்தைக் கூறும் இந்நூல் பிரதம பாடசாலை மாணவர் மாணவிகளுக்கு இன்றியமையாதது என்பது எமது அபிப்பிராயம்.

இப்புத்தகத்தின் பிரயோசனத்தைக் கருதி நமது கல்வி இலாகா அதிகாரிகள் இதைத் தமது ஆதீனத்துக்குட்பட்ட பாடசாலைகளில் உபபாடமாக வைத்து எம்மை ஆதரிப்பார்கள் என்று பெரிதும் நம்புகின்றோம்.

பிரசுரகர்த்தர்.

415Wx
14



125447

உ

முருகவேள் துணை.

உலகம் புகழும் உத்தம மாதர்.

(இரண்டாம் பகுதி)

I

வெட்டுண்டு இறந்த வீரமகள்.

கிறிஸ்தாப்தம் பத்தாம் நூற்றுண்டின் இறுதியில் நம்மிந்திய நாட்டில் இந்துக்களின் சாம்ராஜ்யம் நிலைகுலைந்து அழிய ஆரம்பித்தது. வடமேற்குத் திசையிலிருந்து மதவைராக்கியங் கொண்ட முகம்மதியர் இந்நாட்டைப் படையெடுத்து வந்தனர். அக்காலத்தில் இந்நாட்டு மன்னர் தம்முள் ஒற்றுமையின்றி இருந்தமையால், அவர்கள் இத்தேசத்தை எளிதில் தங்கள் கைவசப்படுத்திக் கொண்டார்கள்; இந்துக்களின் தேவாலயங்களை இடித்துத் தகர்த்தார்கள்; நாடு நகரங்களைத் தீக்கிரையாக்கினுர்கள். எங்கும் அழுகை யொலியே மலிந்து கிடந்த தென்ப.

வருஷா வருஷம் ஆயிரக்கணக்கான முகம்மதியர் இந்நாட்டுள் நுழைந்து பல துறைகளிலும் இறங்கி உழைக்கலாயினர். நாளுக்கு நாள் அவர்

கள் செல்வாக்கு பலப்பட்டு வந்தது. சேனுபலம் பொருந்திய அவ்வந்நிய நாட்டாரின் ஆட்சி இங்கு வேரூன்றி நிலேத்து நிற்க ஆரம்பித்தது. இந்துக்கள் அவர்களைத் துரத்தியடிக்க வலிமை யற்றுக் கிடந்தனர்.

முதன் முதல் வடஇந்தியாவில் கி. பி. 961 ஆம் ஆண்டிலிருந்து 1186 ஆம் ஆண்டுவரை யில், அதாவது, 225 வருஷகாலம் கஸினி வமிசத் தார் அரசியல் நடத்தி வந்தனர். கோரி வமிசத் தைச் சேர்ந்த முகம்மதியர் அவர்கள் ஆட்சியைக் குலைத்து, இருபதாண்டுகளாக, அதாவது, கி. பி 1206 ஆம் வருஷம் முடிய அரசாண்டு வந்தனர். அவர்களுக்குப் பிறகு, இத்தேசம் அடிமையரசர் வசம் சிக்கிற்று.

இந்த அடிமை அரச வம்சத்திற்கு மூல புரு ஷன் குத்புத்தீன் (Kutbuddin)என்பவன். அவன் பராக்கிரமசாலி. வெற்றித்தருக்குடைய வேந்தர் வேந்தன்; அவன் காசி மன்னனைப் போரில் தொலைத்தான்; கன்னோசி நாட்டைத் தன் கைவசப் படுத்திக் கொண்டான். அவனுடைய தளகர்த்தர் பீஹார் (Bihar), வங்காளம் (Bengal) முதலிய நாடு களை முகம்மதிய ராஜ்யத்தோடு சேர்த்தனர். அவன் டில்லியில் நான்கு வருஷ காலம் அரசாண்டு வந் தான். அவன் தன் வயோதிக தசையில் குடிக்கத் தலைப்பட்டுச் சோம்பேறியாய்க் காலங் கழித்து

வந்து கி. பி. 1211 ஆம் ஆண்டில் காலகதி அடைந்தானென்ப.

அவனுடைய சுவீகாரப் புதல்வன் ராஜ்ய பாரம் தாங்கும் சக்தி யற்றிருந்தான். ஆதலால், அவன் அடிமைகளுள் முதன்மையானவனும், அவனுடைய மகளை மணந்த மருமகனும், போர் வன்மை பொருந்தியவனுமான ஷாம்சுத்தீன் அல் டாம்ஷ் (Shamsuddin Altamsh) டில்லி சிம்மாச னத்தில் அமர்ந்தான்.

குத்புத்தீன் இறந்தபிறகு அவனுடைய தள கர்த்தர் ஹிந்துஸ்தானத்திலுள்ள சில மாகாணங் களைத் தங்கள் ஆதீனத்துக்கு உட்படுத்திக்கொண் டார்கள். அல்டாம்ஷ் அவர்களுடன் போராடி அம் மாகாணங்களைத் தன் ராஜ்யத்தோடு சேர்த் துக்கொண்டான். அவன் உயிரோடு இருந்தவரை யில் செயல் அற்றிருக்க வில்லை. அவன் காலத்தில் முதல் முதல் மொகலாயர் சங்கிஸ்கானைத் தலைவனு கக் கொண்டு பஞ்சாப், சிந்து முதலிய தேசங்களைக் கொள்ளை யடித்தனர். அவர்கள் உள்நுழைய ஒட்டாவண்ணம் தடுப்பதற்கு அவன் சேனை களைப் பண்ணுறுத்துவதில் தன் கருத்தைச் செலு த்தினன். அவனுக்கு நாலைந்து புதல்வர்களும் ஒரு புதல்வியும் உண்டு. அவள்தான் இக் கதா நாயகி. அவள் பெயர் முலைமத் ரிஸியா என்பது.

அவள் கல்வியறிவு நிறைந்தவள்; புத்தி நுட்பமும், சாதுரியமும் பொருந்தியவள்; தைரிய மிக்கவள். அவள் தன் தகப்பன் போர் விஷயமாய் டில்லியை விடுத்து நெடுந்தூரம் போயிருக்கும் சமயங்களில், ராஜ்யபாரம் தாங்கி அரசாட்சி செய்து வருவாள்.

அல்டாம்ஷ், கி. பி. 1236 ஆம் ஆண்டு வியாதியால் பீடிக்கப் பெற்ருன். அப்போது அவன் தன் மந்திரி பிரதானிகளை அருகில் அழைத்து, "ஐயன்மீர்! எனக்குப்பிறகு எனது ராஜ்யத்தை ஆளும் யோக்கியதை என் குமாரருள் ஒருவனுக்காயினும் கிடையாது என்று எனக்குத் தெரியும்; அவ்விஷயத்தை நீங்களும் தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். ஆதலால், நீங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரே பிடிவாதமாய் என்னுடைய குமாரத்தி ருலைமத் ரிஸியாவைச் சிம்மாசனத்தில் அமர்த்தி அவளைக்கொண்டு அரசியல் நடத்தி வருவீர்களாக! அவ்விதம் செய்வதாக நீங்கள் எனக்கு வாக்குறுதி செய்யுங்கள். அப்போதுதான் நான் மன நிம்மதி அடைவேன். அவள் ஆண் பிள்ளையாய்ப் பிறந்திருந்தால் இச் சமயத்தில் எனக்கு மனக்கிலேசமே ஏற்பட்டிருக்காது," என்ருன்.

மந்திரி பிரதானிகள்:—"அரசே! நாங்கள் தேவரீர் இஷ்டப்படியே செய்கிருேம். அது விஷயத்தில் தாங்கள் சந்தேகப்பட வேண்டா.

அல்டாம்ஷ்:—சரி.

மந்திரி பிரதானிகள், அரசன் எதிரில் அவ்விதம் பேசினுர்களே யொழிய அவர்களுக்கு ருலைமத் ரிஸியா எத்துணைச் சக்தி வாய்ந்தவளாய் இருந்தும் அரசுரிமை ஏற்றுக்கொள்ளத் தகுந்தவள் அல்லள் என்று தோன்றிற்று. "அவள் ஒரு பெண்பால். அவளோ ஆண் பிள்ளைகளாகிய எங்களுக்குக் கட்டளையிடுவது!—நாங்களா அவளுக்கு அடங்கி அவளுடைய கட்டளையை நிறைவேற்றுவது!" என்று அவர்கள் பலவாறு எண்ணலாயினர்.

அவர்களுடைய அறிவீனத்தை என்னென்றுரைப்பது! உலக சரித்திரத்தில் எத்தனை ஸ்திரீகள் ஆண் பிள்ளைகளைக் காட்டிலும் புத்தி கூர்மையுடையவர்களாய் இருந்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிருேம். அவர்கள் ஆண் பிள்ளைகள் செய்ய இயலாத அரும்பெருஞ் செயல்கள் பல செய்து முடித்திருக்கிருர்கள். எத்தனை அரசர் தத்தம் மனைவியரின், ஆலோசனையைக் கேட்டு நடந்து வெற்றியடைந் திருக்கின்றனர். நுணுகி ஆராயுங்கால், பெண்களின் உதவியின்றி ஆண் பிள்ளைகள் ஒன்றும் செய்ய முடியாது என்னும் உண்மையை அனுபவம் நிறைந்த பெரியோர்—அறிவு முதிர்ந்த அறிஞர்—மறுக்க மாட்டார்கள்.

இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு அல்டாம்ஷ் இறந்து போனான். முஹமத் ரிஸியாவுக்கு முடி சூட்டுவதாக வாக்களித்த மந்திரி பிரதானிகள், அவனுடைய குமாரனை பிருஸ் ஷா (Firuz Shah) என்பவனுக்குப் பட்டங் கட்டினார்கள். அவன் சிற்றின்பப் பிரிய மேலீட்டினால் ராஜ்ய பாரத்தைத் தாங்க மனமில்லாமல் தயங்கினான். அப்போது ராஜ்ய அதிகாரத்தின் சிறப்பை நன்றாய் உணர்ந்திருந்த அவனுடைய தாய் அவனைத் தேற்றி, "மகனே!—நீ ஏன் தயங்குகிறாய்? நான் இருக்கிறவரையில் உனக்கென்ன பயம்? அரசியல் நடத்த வேண்டும் என்னும் கவலை உனக்கு வேண்டா! உனக்காக நான் அரசுசெலுத்தி வருகிறேன்." என்றாள்.

பிருஸ் ஷா அதற்குச் சம்மதித்தான்; தன் மனம் போன போக்கெல்லாம் நடக்கத் தலைப்பட்டான். அது முதற் கொண்டு அவன் தாய் தன்னிஷ்டம் போல் அரசாட்சி செய்து வந்தாள்; மந்திரி பிரதானிகளை மதிப்பதில்லை; அவர்களுடைய புத்திமதியையும் கேட்பதில்லை. வீட்டு விவகாரமும் ராஜ்ய நிர்வாகமும் ஒன்றென மதித்து விட்டாள். அவள் தன்னைப் புகழ்பவரை மித்திரரெனவும் இகழ்பவரைச் சத்துருக்கள் எனவும் பாவித்து முன்னவரைப் பரிபாலித்தும் பின்னவரைச் சிட்சித்தும் வந்தாள்.

மந்திரி பிரதானிகள் அவளுக்கு எவ்வளவு புத்தி சொல்லியும் பயனில்லாமற் போயிற்று. அல்டாம்ஷுக்கு அவர்கள் செய்த வாக்குறுதியை மீறி ஒரு பயனுமற்றவனை அரசனாக்கியதால் அவர்களுக்கு அக்கதி வாய்த்தது என்று உணர்ந்து வருந்தினர்; ஒன்று கூடி ஆலோசித்தனர். அவளையும் அவள் புதல்வனையும் டில்லி நகரை விட்டு அகற்றினர்.

அல்டாம்ஷ் இறந்த ஆறும் மாதம் இச்சம்பவம் நிகழ்ந்தது. பிறகு, முஹமத் ரிஸியா, ரிஸியத் உத்தீன் (Reziyyatuddin) என்னும் பட்டப் பெயருடன் டில்லியில் சிம்மாசனம் ஏறினாள். இந்தியாவில், முகம்மதிய ராஜ்யத்தில், முதல் முதல் இராணியென ராஜ்ய பாரம் தாங்க வந்தவள் இவளே.

முஹமத் ரிஸியா கல்வித் திறமையிலும் மன உறுதியிலும், தேசத்தைப் பகைவரிடமிருந்து காப்பதிலும், தீவிர புத்தியிலும், ராஜ்ய நிர்வாக நிபுணத்துவத்திலும், போர் வன்மையிலும், நல்லொழுக்கத்திலும், நடுநிலைமை தவறாத நெறியிலும் தன் சகோதரர்களைக் காட்டிலும் மேம்பாடுற்று விளங்கினாள்.

இத்துணை வல்லமைவாய்ந்த இம்மாதரசி அரசாளவந்த காலம் குழப்பம் மிக்கது; அமைதியற்றது; மத வைராக்கியமுள்ளது; நம்பிக்கை இல்லாதது. அக்காலத்தில் பகைமன்னர் ஒரு

வரோடு ஒருவர்போர்புரிந்த வண்ணம் இருந்தனர். எத்தகைய வென்றி மறம் சிறந்த வீரனும் ராஜ்ய நிர்வாக நிபுணனும் அக்காலத்தில்வெற்றியுடன் அரசாள்வது கடினமா யிருந்தது.

அப்படி இருந்தும், ருஸமத் ரிஸியா முக முடியைக் களைந்து, ஆண் உடை தரித்து, அரியா சனத்து அமர்ந்து, நீதி நெறி தவருது, சிறிது காலம் அரசாட்சி செய்துவந்தாள். முகம்மதிய மந்திரி பிரதானிகள் அவளுடைய சக்தியை உணர்ந்து அவளுடன் ஒத்து உழைத்துவந்தார்கள். முகம்மதிய ராஜ்யத்தில் சமாதானம் நிலைபெற்றது. அவள் அவ்வப்போது மாறுவேடம் பூண்டு நகரி சோதனை செய்து வந்தாள். நியாய ஸ்தலத்தில் அமர்ந்து தன்முன் வந்த வழக்குகளைத் தீர விசாரித்து அக்காலத்துச் சட்டப்படி தீர்ப்பு செய்தாள். குடிஜனங்கள் ஒரு குறைவு மின்றி வாழ்ந்தனர்; அவளை மனமார வாழ்த்தினர். போர் நிகழுங் காலத்தில் அரண்மனையில் தங்கி அரசபோகம் அநுபவிப்பதைத் தவிர்த்து, யானை மீதேறி, சேனை வீரர் புடைசூழ மிக்க வீரா வேசத்துடன் எதிரிகளைத் தாக்குவாள்.

அதனல், அக்காலத்து ஜனங்கள் அவள் பெண்பாலாய் இருந்தும் அவளை ஆண்மகன்எனப் பாவித்தனர். "சுல்தான்," "பாதுஷா" என்று அழைத்தனர்.

ஆனல், மந்திரி பிரதானிகளுள் பெரும்பாலார், பெண்பால் ஒருத்தி அரசாட்சிசெய்வது குரானுக்கு (Koran) விரோதமென்று நம்பி அவளை வெறுக்கலாயினர். அவளை நாட்டினின்றும் துரத்த எப்போது சமயம் வாய்க்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். காரணம் யாதுமின்றி, அத்துணை வல்லமை பொருந்தி எவரும் மெச்சிப் புகழ அரசியல் நடத்தி வந்த ருஸமத் ரிஸியாவை நாட்டினின்றும் அகற்றுவது கூடாத காரியமன்ருே!

ஐயம் உள்ளவரையில் பயமில்லை. பெண்பாலாகிய தான் அரசு செலுத்தல் கூடாதென்று தன் மீது பலர் பகைமை கொண்டிருக்கும் விஷயத்தை அறிந்திருந்தும் ருஸமத்ரிஸியா அஞ்சவேயில்லை. டில்லியில் தனக்கு விரோதமாகக் கிளம்பிய கலகங்களை அவள் அவ்வப்போது அடக்கினுள். பல விதங்களில் தன்னைப் பலப்படுத்திக் கொண்டாள்.

அவளுக்குக் குற்றேவல் செய்ய அரண்மனையில் அநேக அடிமைகள் இருந்தார்கள். அவர்களுள் அபிஸீனிய நாட்டினின்றும் கொண்டுவரப் பெற்ற அடிமைஒருவன் இருந்தான். அவன் சிறிது கல்வியறிவுடையவன்; அரசி தனக்கிட்டவேலையை முகங்கோணுமல் புத்திசாலித் தனமாகவும் துரிதமாகவும் செய்து முடிப்பான். அவன் அவளைத் தன் தமக்கை என மதித்து மிக்க பக்தி விசுவாசத்துடன்

நடந்துவந்தான். அவள் நன்றியறிதலும் நன்னடக்கையும் பொருந்திய அவ்வடிமையைப் பட்சமுடன் நடத்தினாள். மற்ற அடிமைகளுக்கு அவன் மீது பொருமை உண்டாயிற்று. அவர்கள் அவன் மீது பொய்க்கதைகள் கட்டிவிட்டனர்.

ஒருநாள் அவள் டில்லி நகரைச் சுற்றிப் பார்த்து வர விரும்பினாள். அவள் ஏறிச்செல்ல அபிஸீனிய நாட்டு அடிமை இலாயத்திலிருந்து குதிரை யொன்றைப் பண்ணுறுத்தி அரண்மனையின் பின்புற வாயிலண்டையில் கொண்டு வந்து நிறுத்தினான். எக்காலத்தும் புன்னகை தவழும் முகத்தினளாகிய முஸைமத் ரிஸியா அக்குதிரைமீது ஏற யத்தனிக்கையில் கால் நழுவிற்று; கீழே விழப்போனாள். அருகில் இருந்த அடிமை அவள் விழாதபடி அவளைத் தன் கையில் தாங்கிக் கொண்டான். அவளும் குதிரையின் மீது ஆரோகணித்துக் கொண்டு யமுனை (The Jumna) ஆற்றங்கரைக்குச் சென்றாள்.

அப்போதுதான் அவளைக் கலிபுருஷன் பின் தொடர்ந்தான். அடிமை அவள் கீழே விழாதபடி அவளைத் தன் கையில் தாங்கியவண்ணம் குதிரை ஏற்றுவித்ததைக் கண்டவர்கள் அவன்மீது சந்தேகங் கொண்டார்கள். அது முதற்கொண்டு டில்லி நகரவாசிகளும் அவளைப் பகைக்கலாயினர்.

அவளை டில்லி நகரை விட்டுத் துரத்த நிர்ணயஞ் செய்துகொண்ட முகம்மதிய பிரபுக்கள் அது தான் தகுந்த தருணம் என்று ஒன்று கூடினர்; சதியாலோசனை செய்தனர். தபர்ஹின்ட் அல்லது ஸர்ஹின்ட் என்னும் மாகாணத்துக்கு அதிபதியான மாலிக் ஆல்தூனியா (Altunia), சதியாலோசனைக் காரருக்குத் தலைவனாய் இருந்து அவளை அகற்ற வழி தேடினான்.

ஆல்தூனியா ஒரு பெருஞ் சேனையைத் திரட்டினான். முஸமத் ரிஸியா அவனைத் தடுக்க முயன்றாள். ஆயிரக்கணக்கான சேனாவீரர் அவள் கட்சியைச் சேர்ந்து கொண்டார்கள். டில்லிமா நகரில் கலகம் ஒன்று நேர்ந்தது. அந்நகர வீதிகளில் இருதிறத்துச் சேனாவீரரும் ஒருவரை யொருவர் எதிர்த்துக் கொதித்து மலைந்தனர். வீதிகளெல்லாம் இரத்த வெள்ளம் புரண்டோடிற்று. அந் நகரமாந்தர் அனைவரும் தத்தம் வீடுகளை விட்டு ஓடிப் போனார்கள். அக்கலகத்தில், அபிஸீனிய நாட்டு அடிமை தன் அரசிக்காகப் பொருது மாண்டான்.

இறுதியில், ஆண்வேடந் தரித்து வெகு ஆண்மையுடன் எதிரிகளை வெட்டி வீழ்த்திய முஸமத் ரிஸியா சோர்வடைந்து தான் ஏறியிருந்த போர்க்குதிரையின் பிடரிமயிரின் மீது சாய்ந்து விட்டாள். அதை உணர்ந்த உத்தம லக்ஷணங்கள் பொருந்திய அக்குதிரை அசையாமல் நின்றுவிட்

டது. அதனால், குதிரையும் அரசியும் எதிரிகள் வசம் சிக்கினர். அரசியைச் சேர்ந்த சேனாவீரர் அவளைக் கைது செய்து கொண்டு போவதைக் கண்டு ஒன்றும் செய்யத் தோன்றாமல் இருந்த விடம் தெரியாமல் ஓடி மறைந்தனர்.

முஸமத் ரிஸியாவையும் அவள் ஏறியிருந்த குதிரையையும் எதிரிகள் ஆல்தானியாவின் முன் கொண்டு போய் நிறுத்தினார்கள். அவன் போர் முடிந்ததை அறிந்து அவளை ஒரு சிவிகையில் ஏற்றுவித்துத் தன் கோட்டைக்குக் கொண்டு போகக் கட்டளையிட்டான். போரில் மடிந்தவர்களை டில்லி நகருக்குப் புறம்பே புதைக்க ஆஞ்ஞாபித்துத் தன்னுடைய சேனா வீரருக்கு அவரவர் நிலைமைக்குத் தக்கபடி வெகுமதியளித்து முஸமத் ரிஸியா ஏறிச் சென்ற சிவிகையைப் பின் தொடர்ந்தான்.

சிவிகை கோட்டையை அடைந்தது. அரை மணி நேரத்துக்குப் பிறகு ஆல்தானியாவும் அவ்விடத்தை அடைந்தான். சிவிகையைச் சுமந்து சென்றவர்கள் அரசியை அசையாமல் கோட்டைக்குள் கொண்டுபோய் அங்கிருந்த ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் கிடத்தி அயர்வுதீர அவளுக்குச் சைத்யோபசாரங்கள் செய்தனர். ஆல்தானியா விரைந்து சென்று மஞ்சத்தின் பக்கலில் நின்றான். அவளும் களைப்பு நீங்கித் தன் கண்களைத் திறந்து அங்கிருந்தவர்களை மிரள மிரளப் பார்த்தாள்.

“என் குதிரை எங்கே? போர்வீரர் எங்கே? நீங்கள் யாவர்?—இது யார் மாளிகை? நான் இங்கு வந்ததேன்?” என்று பல கேள்விகள் கேட்டாள்.

அங்கிருந்தவர் எவரும் பதில் பேசவில்லை. மௌனம்சாதித்த வண்ணம் இருந்தனர்.

அரசி மறுபடியும் அண்டையில் நின்றிருந்தவர்களைப் பார்த்து, “நீங்கள் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லாதிருப்பதேன்?—நான் அரசி என்பது உங்களுக்குத் தெரியாதா?” என்றாள்.

அப்போது அவள் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஆல்தானியா அவளை நோக்கி, “இவர்கள் உன்னிடம் ஒன்றும் பேசக்கூடாதென்று ஆல்தானியா உத்தரவிட்டிருக்கிறார். இங்கிருப்போர் எவரும் அவர் வார்த்தையை மீறி நடவார்கள்” என்றான்.

முஸமத் ரிஸியா :—நான் இப்போது மாலிக் ஆல்தானியாவின் மாளிகையிலா இருக்கிறேன்.

ஆல்தானியா :—ஆம்.

முஸமத் ரிஸியா :—அப்படியானால் மிகவும் சந்தோஷம். கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டது. நீவிர் யாவர்?

ஆல்தானியா :—ஆல்தானியா நானே.

முஸமத் ரிஸியா :—நான் உம்மிடம் சில இரகசிய விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டும். இங்கிருப்பவரை வெளியிற் போகச் சொல்வீராக.

ஆல்தானியா திரும்பி அங்கிருந்தவர்களை நோக்கினன். வாயெடுத்து ஒன்றும் பேசவில்லை. அங்கிருந்தோர் அனைவரும் வெளியே சென்றனர்.

அவ்விடத்தில் ஆல்தானியா தவிர வேறு எவரும் இல்லாதிருப்பதைக் கண்ட ரிஸியா எழுந்து உட்காந்து மெல்லிய குரலில், "ஐய! உம்மைத் தனியே கண்டு பேசவேண்டுமென்று நான் நெடுநாட்களாக விருப்பம்கொண்டிருந்தேன். அவ் விருப்பம் ஆண்டவன் அருளால் இப்போதுதான் நிறைவேறிற்று." என்றாள்; இன்னும் பேச வாயெழாமல் தயங்கினள்.

"இவள் எதைப்பற்றி என்னிடம் தனிமையில் பேச விரும்பி யிருப்பாள்!" என்று யோசித்த வண்ணம் ஆல்தானியா மௌனம் சாதித்தான். ஒன்றும் அவன் புத்திக்கு எட்டவில்லை. சிறிது நேரம் சென்றது.

முலைமத் ரிஸியா புன்முறுவல் பூத்தாள். "என்ன யோசிக்கிறீர்!" என்றாள்.

ஆல்தானியா:—ஒன்று மில்லை......நீ தனிமையில் என்னுடன் பேச விரும்பிய விஷயம் யாது? நான் அதை அறிய ஆவலுள்ளவனாய் இருக்கிறேன்.

முலைமத் ரிஸியா:—தாங்கள் என்னை மணம் புரிந்துகொள்ளவேண்டும் என்னும் விஷயத்தைப் பற்றியே.

ஆல்தானியா மனமகிழ்ச்சி யடைந்தான். சந்தோஷ மிகுதியால் பேச்சொழிந்து நின்றான். மௌனமே சம்மதத்திற்கு அறிகுறி என்பதை அறிந்த முலைமத் ரிஸியா அரைநொடியில் அவன் மனத்தைக் கலைத்துப் பேராபத்தினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குத் தான் சமயோசிதமாய்ச் செய்த சூழ்ச்சி பலித்துவிட்டதை நினைக்க நினைக்க அவள் உள்ளம் பூரிப்படைந்தது. ஆண்மக்களின் மன உறுதியைப் பெண்மக்கள் தமது சூழ்ச்சியால் வெகு எளிதில் கரைக்க வல்லவர்கள் என்பது ஆல்தானியா விஷயத்தில் உண்மையாயிற்று.

முலைமத் ரிஸியா தன்னை விவாகம் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறிய மொழிகள் அவள் மீது அவனுக்கிருந்த பகைமையை வேரோடு களைந்தன. அவளைத் தவிர வேறு எவரும் ராஜ்ய பாரம் தாங்குவதற்கு உரியவர் அல்லரென்று அவன் பூரணமாய் நம்பி விட்டான்.

இச்சம்பாஷணை நிகழ்ந்த ஒரு வாரத்திற்குப் பிறகு ஆல்தானியாவுக்கும் முலைமத் ரிஸியாவுக்கும் டில்லியில் விவாகம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

இஃதிவ்வாறாக, எழெட்டு நாட்களுக்கு முன் டில்லியில் நிகழ்ந்த கலகத்தில் ஆல்தானியா முலைமத் ரிஸியாவைக் கைதுசெய்து கொண்டுபோனன்.

என்னும் செய்தி அந்நகர முழுவதும் பரவிற்று. ஆல்தானியா அவளைக் கட்டாயம் கொலைசெய்து விடுவான் என்று அவள் கட்சியைச் சேர்ந்த சில பிரபுக்கள் நினைத்து அவனுடன் கலந்துயோசியா மல் ஆல்டாம்ஷின் புதல்வனும் முஸமத் ரிஸியா வின் இளைய சகோதரனுமான "பெய்ரம்" என் னும் அரசிளங் குமரனுக்குப் பட்டங்கட்டி விட்ட னர். அதற்குப்பிறகுதான் ஆல்தானியா ரிஸி யாவை மணம் புரிந்து கொண்டான்.

பெய்ரம் டில்லியில் சிம்மாசனம் ஏறிய செய்தி ஆல்தானியாவின் காதிற்பட்டது. அவனுக்குக் கோபம் பொங்கி எழும்பிற்று. "நான் உயிருடன் இருக்கும் வரையில், டில்லியில், என்மனைவி முஸ மத் ரிஸியாவைத் தவிர வேறு எவரையும் அரசு செலுத்த விடேன்" என்று அவன் பிரதிக்ஞை செய்துகொண்டான்;பெரிய சேனை யொன்று திரட் டினன்.

பெண்பாலொருத்தி ராஜ்யபாரம் தாங்குவது குரானுக்கு விரோதம் என்பதை மறந்துதன்மனைவி யாகிய முஸமத் ரிஸியாவுக்கு முடி சூட்ட ஆல் தானியா முயற்சி செய்வதைக் கேள்விப்பட்ட அவ னுடைய நண்பர் அனைவரும் அவனை முழுமனத் தோடு பகைத்தனர், ஆதலால், அவர்கள் அவனை எதிர்க்கத் தயாராயினர். பெய்ரம் கட்சியைச் சேர் ந்து கொண்டனர்.

ஒரு மாதம் சென்றது. இருதிறத்தாருக்கும் போர் மூண்டு கொண்டது. டில்லி நகருக்கு அரு கில் இருதிறத்தாரும் ஒருவரை யொருவர் எதிர்த் துத் தாக்கினர். முஸமத் ரிஸியாவும் ஆல்தானி யாவும் அவர்களைச் சேர்ந்தோரும் இருமுறை தோல்வியுற்றோடினர். எதிரிகள் சலிப்படையாமல் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றனர்.

கணவனும் மனைவியும் இனி அங்கிருந்தால் தங்கள் உயிருக்கே ஹானி நேரிடும் என்றுணர்ந்து குதிரைகளை முடுக்கினர். அவைகள் காற்றினும் கடுகிச் சென்றன. பகைவர் அவர்களைப் போகட்டும் என்று விட்டுவிடவில்லை; துரத்திக் கொண்டே ஓடினர். அவ்விருவரையும் பிடித்துக் கைதுசெய்து டில்லிக்குக் கொண்டுபோக வேண்டும் என்பது அவர்கள் கருத்து.

ஆதித்தன் அத்தகிரி அடைந்தான். ஆகா யத்தில் காரிருள் கவிந்து கொண்டது. முஸமத் ரிஸியாவையும் அவள் கணவனையும் துரத்திக் கொண்டு சென்றவர்கள் களைப்படைந்தவர்களாய்ப் பின்தங்கி விட்டனர். அதன்பேரில், அவ்விருவ ரும் தங்கள் குதிரைகளின் வேகத்தை அடக்கி மெதுவாகச் சென்றனர். நள்ளிரவில் கெய்த்தால் (Kaithal) என்னும் கிராமத்தை அடைந்து அங் குத் தங்கி இளைப்பாறினர். அக்கிராமத்தில் ஆல் தானியாவுக்கு விரோதிகள் இருவர் இருந்தனர்.

அவர்கள் எக்காரணம்பற்றி அவன்மீது விரோதம் கொண்டிருந்தனர் என்பதை இதுகாறும் எவரும் அறிந்திலர். அவ்விரோதிகள் அவன் அங்குத் தங்கியிருப்பதை அறிந்து மறுநாள் பொழுது புலர்வதற்குள் அவனையும் அவன் மனைவி மூலைமத் ரிஸியாவையும் பச்சாதாபம் இல்லாமல் குத்திக் கொன்று அவர்களிடமிருந்த ஆபரணங்களையும் பொன் நாணயங்களையும் அபகரித்துக் கொண்டு ஓடிப்போனார்கள்.

சூரியன் உதித்தான்! கெய்த்தால் கிராமத்தார் அவ்விருவரும் கொலையுண்டு இறந்து கிடப்பதைக் கண்டனர். தங்கள் அரசிக்கு அக்கதி வாய்த்ததே என்று அகங்குழைந்து வருந்தினர். வருந்தியாவதென்? அச்செய்தி ஹிந்துஸ்தான முழுவதும் பரவிற்று. டில்லிநகர மாந்தரும் மூலைமத் ரிஸியாவுக்கு உகந்த மந்திரி பிரதானிகளும் கெய்த்தால் கிராமத்துக்கு வந்து அக்காட்சியைக் கண்ணுற்று, "அந்தோ! குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்த ரிஸியாவே! உத்தம அரசியே!! நீ வினைப்பயனால் 'நடை மெலிந்து' இவ்வூரை நண்ணி வீணே கொலையுண்டு இறந்தாயே. பிரஜைகளின் நன்மையைக் கருதி, மிக்க மாண்புடன் அரசியல் நடத்தி, ஏதிலரை எதிர்த்து, நடுநடுங்க வைத்த உத்தமியாகிய உனக்கோ இக்கதி வாய்க்கவேண்டும். நீ பெண்ணாய்ப் பிறந்த தோஷத்தால் பேரிடர் உற்று

வருந்தி அகால மரணத்துக்கு உட்பட்டாய் என்பது நிச்சயம். இனி உன்னைப்போன்ற அரசியை நாங்கள் காண்பது அரிதினும் அரிதே! மூகமதியராஜ்யத்துக்கு முடிவு ஏற்படும்போல் தோன்றுகிறது. நிரபராதியான உன்னைக் குத்திக் கொன்ற கன்மனப்பாவிகள் எப்பாடுபட்டு அழிவரோ தெரிகிலேம்" என்று பலவாறு பிரலாபித்தனர்.

கி. பி. 1240 ஆம் ஆண்டு அக்டோபர் மீ 27 உ இரவில் கொலையுண்டிறந்த மூலைமத் ரிஸியாவின் பிரேதம் ஆல்தானியாவின் சவத்துடன் மறுதினம் மாலையில் யமுனையாற்றங்கரையில்டில்லி நகருக்கு வடக்கே மூன்று கல் தூரத்தில் முகமதியர் முறைப்படி அடக்கம் செய்யப் பெற்றது. அவளுடைய கல்லறையைப் புண்ணிய ஸ்தலமெனக் கருதி அநேகர் அவ்விடத்திற்கு யாத்திரை செய்தனர் என்ப.

அடிமை அரசனுக்கு அருமைப் புதல்வியாய்ப் பிறந்து, அக்காலத்திருந்த ஆண்மக்களைக் காட்டினும் போராற்றல் வாய்ந்து, ஏறக்குறைய நான்கு வருஷகாலம் நீதி நெறி வழாது அரசியல் நடத்திவந்த மூலைமத் ரிஸியா ஓர் ஒப்பற்ற ஸ்திரீ ரத்நம் என்றுரைப்பது மிகையாகாது. அவளைப் போன்ற அங்கனாமணிகள் வெகு சிலரே இப்பரந்த உலகில் ஜனித்துளார்.

கல்வியறிவு மிகுந்து, நாகரிகம் முதிர்ந்துள்ள இக்காலத்திலும், இந்தியாவில், எத்துணை மேம்பாடுற்றிருந்தாலும் பெண்களுக்குப் பெருமையில்லை. அவ்விதமிருக்க, அக்காலத்தில் முஸமத் ரிஸியாவை ஆண்மக்கள் யாவரும் பொருமை மேலீட்டினால் அவமதித்துப் பேசியது ஆச்சரியப்படத்தக்கது அன்றன்றோ!

சமகாலத்தவனும் (Contemporary) தபகத்தி நஸாரி ((Tabakati-i-Nasari) என்னும் நூலைத் தொகுத்துப் பதிப்பித்தவனுமாகிய முகம்மதிய நூலாசிரியன் முஸமத் ரிஸியாவைப் பின்வருமாறு மெச்சிப் புகழ்ந்து எழுதியிருக்கிறான்:—

"ரிஸியா மகாராணி எனத் தகுந்தவள். விவேகமும் நீதியும் தயாள குணமும் பொருந்தியவள். அவள் கவிஞரையும் இதர கல்வியாளரையும் ஆதரித்து வந்தாள்; பிரஜைகளைப் பிரியமுடன் பரிபாலித்தாள்; போரில் நிகரற்று விளங்கினாள். அரசிக்கு இருக்கவேண்டிய முக்கிய குணங்களும் யோக்யதையும் அவளுக்கு ஒருங்கே அமைந்திருந்தன. இத்துணை நற்குண நற்செய்கைகள் அவளுக்கு இருந்தும் அவள், பெண்பாலானதால் அவற்றால் ஒரு பலனும் அடையவில்லை. அவள் இந்து பகை மன்னரைத் தன் சேனைகளைக்கொண்டு

நேரில் தாக்குவாள்; தன் முகமூடியைக் களைந்து எவரும் பார்க்கும் வண்ணம் குஞ்சரம் ஊர்ந்து செல்வாள்; குடிகளின் குறைகளை விசாரித்து அவற்றை அகற்றும் உபாயம் தேடுவாள்; ராஜ்யத்திலிருந்த அநீதிகளைப் போக்கி நீதிமுறைமையை நிலைநாட்டினாள்"

இத்தகைய குணவிசேஷங்களே அவள் டில்லியில் நெடுங்காலம் அரசாள்வதைத் தடுத்து அவளை அகாலமரணத்திற்கு உட்படுத்தினவென்று சரித்திராசிரியர் கூறுகின்றனர். அக்கூற்றின் உண்மையை ரிஸியாவின் ஜீவிய சரிதையை நுணுகி ஆராய்வோர் மறுப்பதற்கில்லை.

175447
600 003

II

விதிப்பயனை வெல்ல முடியாத அரசகுமாரி

ஒரு நாள் அழகிய கப்பலொன்று பிரான்ஸ் (France) நாட்டிலிருந்து ஸ்காத்லந்து (Scotland) தேசத்தை நோக்கி, "இங்கிலீஷ் சானல்" (English Channel) என்னும் கடல்மார்க்கமாய்ப்பாய்விரித்து ஓடிக்கொண்டிருந்தது. அக்கப்பலின் மேல் தட் டில் உட்கார்ந்த வண்ணம் ஓர் இளம்பெண் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் மறைந்து கொண்டு வந்த பிரான்ஸ்நாட்டுக் கடற்கரையை நோக்கினாள்.

அவள் துக்கத்தில் அழுந்தி யிருந்தும் அவளுடைய முகத்தில் அழகு வழிந்தோடிற்று. அவள் ஐசுவரியமும் இராணி என்னும் பாக்கிய மும் ஒருங்கே பொருந்தியவளாய் இருந்தாள். அவளைச் சூழ்ந்து நின்ற தோழிகள் அவள் துய ரத்தை ஆற்றும் ஆற்றல் அற்றிருந்தனர். அவள் மெல்லிய குரலில் பெருமூச்செறிந்த வண்ணம், "பூலோக சுவர்க்கம் என்று வர்ணிக்கத் தகுந்த என்னரும் பிரான்ஸ் (France) நாடே! என் குழந் தைப் பருவமுதல் இதுவரையில் உன் மடியில் தவழ்ந்து விளையாடிய நான் என் இஷ்டத்துக்கு விரோதமாய் உன்னைவிட்டுப் பிரிந்து போகிறேன்.

உன்னை நான் மறுபடியும் எப்போது காண்பேனோ!—கடவுளின் திருவருள் எப்படியிருக்கிறதோ!— என்னருமைக் கணவனை இழந்தேன். அவரோடு எனக்கிருந்த அதிகாரம் அறவே ஒழிந்தது. மலைகள் அடர்ந்ததும் குளிர்மிகுந்ததுமான நான் பிறந்த தாய் நாடாகிய ஸ்காத்லந்தில் என் ஜீவ காலத்தை எவ்வாறு கழிப்பேனோ எனக்குத் தெரியவில்லையே. என்னால் ஆவது ஒன்றுமில்லை'' என்றாள். பிரான்ஸ் நாட்டின்மீது அவளுக்கிருந்த அன்பை அளவிட்டுரைக்க முடியாது.

அம்மங்கை நல்லாள் யாவள்? அவள் பிரான்ஸ் நாட்டைவிட்டுப் போவானேன்?

அவள் இராணி மேரி ஸ்டுவர்ட் (Queen-Mary Stuart) என்பவள்; ஸ்காத்லந்து தேசத்தரசனாகிய ஐந்தாம் ஜேம்ஸ் (James V) என்பவனின் புதல்வி. அவள் பாட்டன் நான்காம் ஜேம்ஸ் (James IV) மிக்க தைரியமும் முரட்டுத்தனமும் உடையவன். பிளாடன் (Flodden) என்னும் போர்க்களத்தில் வீராவேசத்துடன் பொருது மாண்டவன். அவளுடைய தாயார் பிரான்ஸ் நாட்டு அரசகுலத்து உதித்தவள்.

மேரி ஸ்டுவேர்ட் ஆறு நாள் குழந்தையாய் இருந்தபோது அவள் தகப்பன் ஐந்தாம் ஜேம்ஸ் காலகதி அடைந்தான். அவனுக்கு வேறு குழந்தைகள் இல்லாததனால் அந்நாள் முதற்கொண்டே அவள் ஸ்காத்லந்து நாட்டுக்கு அரசியாயினள்.

அவளுக்கு ஐந்து பிராயமாயிற்று. அப்போது இங்கிலந்து (England) நாட்டு ராஜநீதி நிபுணர் அந்நாட்டை ஆண்டுவந்த எட்வர்ட் (Edward) என்னும் வாலிப அரசனுக்கு அவளை விவாகம் செய்து முடித்தால் ஸ்காத்லந்தும் அவர்கள் நாட்டுடன் ஒன்று சேர்ந்துவிடும் என்று நம்பி அதுவிஷயமாக முயன்று வந்தனர்.

ஸ்காத்லந்து நாட்டுப் பிரபுக்கள் அச் சம்மந்தத்திற்குச் சம்மதியாமல், மேரியை உடனே பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பினர். அவள் அங்கு யாதொரு கவலையுமின்றி வளர்ந்து வந்தாள். அவளுக்குப் பதினாறு வயது பூர்த்தியானதும் பிரான்ஸிஸ் (Francis) என்னும் பிரான்ஸ் நாட்டு அரசிளங்குமரனுக்கு அவளை விவாகம்செய்து கொடுத்தனர். அவளுக்கு விவாகமான மறுவருஷம் பிரான்ஸிஸ், பிரான்ஸ் நாட்டுக்கு அரசனாயினன். அவனுடைய மனைவியாகிய மேரியும் அத்தேசத்துக்கு அரசியாயினள். ஸ்காத்லந்தில் அவளுக்குப் பதிலாக அரசாட்சிசெய்துவந்த அவள் தாயார் இறந்துவிடவே மேரி அந்நாட்டுக்கும் அரசியாயினள்.

பிரான்ஸிஸ் ஒன்றரை வருஷகாலம் பிரான்ஸ் நாட்டில் செங்கோல் செலுத்தி வந்தான். அதன் பிறகு, அவன் திடீரென்று வியாதியால் பீடிக்கப்

பெற்று இறந்து போனான். பதினென்பதாம் வய தில் மேரி ஸ்டூவர்ட் விதவையாயினள்.

அத்தருணம், ஸ்காத்லந்து தேசத்தார் நாதன் அற்றுக்கிடந்த தங்கள் தேசத்தை ஆள்வதற்கு மேரியை வரவழைத்தனர். அவர்களுடையவேண்டு கோளுக் கிசைந்து, அவள் பிரான்ஸ் நாட்டை விட்டு ஸ்காத்லந்துக்குக் கப்பலில் மேற் சொன்ன படி யாத்திரை செய்யவேண்டி நேர்ந்தது.

அவள் தன் சிறு பிராய முதற்கொண்டு பிரான்ஸ் நாட்டிலேயே வளர்ந்து வந்ததாலும், பிரெஞ்சுக்காரர் உத்தம குணங்கள் பொருந்திய வர்களாய் இருந்ததாலும், அந்நாட்டின் சீதோ ஷ்ண ஸ்திதி அவளுடைய தேக சுகத்துக்கு இன் றியமையாததாலும், அச்சமயத்தில், ஸ்காத்லந்து தேசத்தில் மதசம்பந்தமான குழப்பம் ஏற்பட்டு அமைதி குலைந்திருந்தமையாலும் அங்குப் போக மனமில்லா திருந்தாள். ஆயினும், புருஷன் இறந்த பிறகு பிரான்ஸ் நாட்டில் முன்போல் தனக் குச் செல்வாக்கு இருப்பதற்கு நியாயமில்லை என் னும் எண்ணம் அவளை அந்நாட்டை விட்டுப் போகத் தூண்டிற்று.

அவள் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு ஸ்காத்லந்து தேசத்தை அடைந்தாள். அந்நாட் டார் அவளை மிக்க களிப்புடன் எதிர்கொண்டழைத் தனர். அப்போது அவள் முகத்தில் சந்தோஷம்

என்பது சிறிதும் இல்லை. அவளுடைய மகிழ்ச்சி நெடுங்காலம் நீடித்திராது என்று அவள் நினைத் தாள் போலும்!

மேரி ஸ்டூவர்ட் ஸ்காத்லந்து தேசத்தை அடைவதற்கு முன்பே அங்கு மதசம்பந்தமான குழப்பம் இருந்துவந்தது. அந்நாட்டாருள் பெரும் பாலார் ஜான் நாக்ஸ் (John Knox) என்னும் பெயர்பெற்ற மதாசாரியரின் மதாவேசத்தாலும் வாக்கு வன்மையாலும் உத்தமகுண விசேஷத்தா லும் தாங்கள் இதுகாறும் அநுசரித்து வந்த ரோமன் காத்தலிக் மதக்கொள்கைகளைக் கைநெகிழ விட்டு அதற்கு மாறான சில கோட்பாடுகளைக் கை யாண்டு வந்தனர். அவர்கள் "ப்ராடெஸ்டென் ட்ஸ்" (Protestants) என்று அழைக்கப் பெற் றனர். வெகு சிலரே ரோமன் காத்தலிக் (Roman Catholic) மதஸ்தராய் இருந்து வந்தனர். இவ்விரு மதப்பிரிவினர் ஒருவரோடு ஒருவர் சச்சரவிட்டுக் கொண்டிருந்தனர்.

மேரி ஸ்டூவர்ட், ரோமன் காத்தலிக் மதத்தைச் சேர்ந்தவள். அழகும் இளமையும் அமைந்தவள். அவளை, ஸ்காத்லந்திலுள்ள இருமதப் பிரிவின ரும் யாதொரு வித்தியாசமும் இன்றி நேசித்து வந்தனர். அவள் தனக்கிருந்த புத்தி சாதுர்யத் தைக்கொண்டு சமயோசிதமாகவும் ஜாக்கிரதையாக

வும் நடந்திருப்பின் அவள் ஆட்சிக்கு ஒரு குறை வும் நேர்ந்திராது. அது மங்களகரமாக முடிந் திருக்கும் என்பதற்குச் சந்தேகமே இல்லை. விதி எவரை விட்டது?

அவள் ஸ்காத்லந்து தேசத்தை அரசாளத் தொடங்கினாள். தன் குடி ஜனங்களைப் பாரபட்ச மின்றி நடத்தி வந்தாள். அவர்கள் அவளைப் போற்றிப் புகழ்ந்தார்கள். சில வருஷங்கள் சென் றன. மத சம்பந்தமான குழப்பம் முன்போல் மும் முரமாக இருக்கவில்லை. இருமதப் பிரிவினரும் தம் முள் வித்தியாசமின்றி ஒன்று சேர்ந்து வாழ ஆரம் பித்தனர்.

ஆனால், அவளுக்குக் கெட்ட காலம் கிட் டிற்று.

மேரி ஸ்டுவேர்ட் தன் இளமையைத் தனிமை யில் கழிக்க இஷ்டப்படவில்லை. அவள் லார்ட் டார்ன்லி (Lord Darnley) என்னும் பதினென் பது பிராயமுள்ள ஒரு வாலிபனை உயிர்த்துணை வனாகத் தேர்ந்தெடுத்து விவாகம் செய்து கொண் டாள். அவன் அவளைப் போலவே ரோமன் காத் தலிக் மதத்தைச் சேர்ந்தவன். கட்டழகமைந்தவன்; ஆயினும், அவன் கல்வித்திறமை இல்லாதவன்; முரட்டுத்தனமுள்ளவன்; துர்க்குணங்கள் நிறைந்த வன்.

அவள் அத்தகைய அற்பனை விவாகம் புரிந்து கொண்ட விஷயம் அந்நாட்டாரை மனவருத்தத் துக்கு உட்படுத்திற்று.

நாளடைவில், அவள் லார்ட் டார்ன்லியை வெறுக்கத் தொடங்கினாள். அவனுடைய நடக்கை அவளுக்குப் பிடிக்கவில்லை. அதனால், அவள் அவ னும் அவன் நண்பரும் ராஜ்ய நிர்வாகவிஷயத்தில் தலையிடுவதைத் தடுத்துவந்தாள். அதுவேயுமன்றி; அவள் தன்னையும் தன் நண்பரையும் அசட்டை செய்து, காரிய நிர்வாகத்தில் நிகரற்று விளங்கிய டேவிட் ரிஸியோ (David Rizzio) என்னும் இத் தாலிய நாட்டுப் பிரபு ஒருவனுடைய ஆலோசனை யை அடிக்கடி கேட்டு அதன்படி நடந்து வந் தாள். அதனால், லார்ட் டார்ன்லிக்குக் கோபம் பொங்கி எழுந்தது.

ஒரு நாள் மாலை மேரியும் ரிஸியோவும் அரண் மனையில் அறையொன்றுள் உட்கார்ந்து ராஜ்ய விஷயங்களைப் பற்றி உரையாடிக்கொண்டிருந் தனர். அப்போது டார்ன்லியும் அவன் நண்பர் நால்வரும் ஆயுதபாணிகளாய் அவ்வறையுள் நுழைந்து ரிஸியோவைக் கத்தியால் குத்தினார்கள்; அவன் தன் அருகிலிருந்த மேரியின் ஆடையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தன்னைக் காப்பாற் றிக்கொள்ளமுயன்றான். அவர்கள் அவனைக்கெட்டி யாய்ப் பிடித்து இழுத்துக்கொண்டு அந்த அறைக்

குப் பக்கத்து அறையுள் நுழைந்து குரூரமாக வதைத்துக் கொன்றார்கள். இதுவரையில் வெறுப்புடன் நடத்திவந்த தன் புருஷனை மேரி, இச்சம்பவம் நிகழ்ந்தபிறகு, பகைக்க ஆரம்பித்தாள்.

ரிஸியோ கொலையுண்டிறந்த சில நாட்களுக்குப் பிறகு டார்ன்லி நோயுற்று வருந்தினான். எடின்பரோ (Edinburgh) என்னும் நகரத்துக் கருகேயுள்ள ஒரு தனி மாளிகைக்கு அவனைக் கொண்டு போய் மேரியும் அவளைச் சேர்ந்தோரும் தகுந்த வைத்தியரைக் கொண்டு அவனுக்குச் சிகிச்சை செய்து வந்தனர். அவள் அவனை விட்டு அரைக்கணமும் பிரியவில்லை. ஒரு நாள் இரவு ஏதோ அவசர நிமித்தமாக மேரி தன் புருஷனுக்குத் துணையாக ஒரு வேலைக்காரனை அம்மாளிகையில் நிறுத்திவிட்டு ஹோலி ரூட் (Holy Rood) என்னும் இடத்திலுள்ள அரண்மனைக்குப் போனாள்.

மறுநாள் பொழுது புலர்வதற்கு இரண்டு நாழிகை இருக்கையில், எடின்பரோ நகர மாந்தர் அனைவரும் பேரிரைச்சல் கேட்டுத் தத்தம் படுக்கைகளைவிட்டுத் திடுக்கிட்டெழுந்தனர்; அப்பேரொலிக்குக் காரணம் யாதென அறிய வெளியில் வந்தனர்.

லார்ட் டார்ன்லி வசித்து வந்த மாளிகை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அம்மாளிகையின் பின்புறத்திலிருந்த தோட்டத்தில் இரண்டு பிரேதங்கள் அகப்பட்டன. அவற்றுள் டார்ன்லியின்

பிரேதம் ஒன்று; மற்றொன்று அங்கிருந்த வேலைக்காரனுடையது.

எடின்பரோ நகர மாந்தர் ஒரே வாக்காய், “மேரி ஸ்டுவர்ட், தன் அன்புக்கு உரியவனான லார்ட் பாத்வெல் (Lord Bothwell) என்னும் பிரபுவைத் தூண்டி டார்ன்லியைக் கொன்று அவன் வசித்துவந்த மாளிகைக்குத் தீ வைத்தாள் என்று கூறினர். அதற்கேற்ப, நாலைந்து வாரங்களுக்குப் பிறகு, எடின்பரோ நகரத்திற்குப் புறம்பே குதிரை ஏறிச் சவாரிசெய்துவந்த மேரி ஸ்டுவர்ட்டை, லார்ட் பாத்வெல் பலவந்தமாக டன்பார் (Dunbar) நகரத்துக்குக் கொண்டுபோய் அங்கு அவளை மணம் புரிந்தான்.

மேரி ஸ்டுவர்ட் அத்துணைக் கொடுந் தொழில் செய்ததை அறிந்த அந்நாட்டுப் பிரபுக்களுள் பலர் கோபமேலீட்டினால், அவளுக்கு விரோதமாய்க் கிளம்பினர். பாத்வெல் அவர்களை எதிர்க்கச் சேனையொன்று திரட்டினான். இருதிறத்தாருடைய சேனைகளும் எடின்பரோ நகரத்துக்கு அருகிலுள்ள “கார்பெரி ஹில்” (Carbarry Hill) என்னும் இடத்தில் சந்தித்தன. பாத்வெல்லின் சேனை வீரருள் அநேகர் அவனைக் கைவிட்டு ஓடினர்.

மேரி ஸ்டுவர்ட் எதிரிகள் வசம் சிக்கினாள். அதைக் கண்ட பாத்வெல் குதிரை ஏறி டன்பார் நகருக்குக் காற்றினும் கடுகிச் சென்று அங்கிருந்து

டென்மார்க் (Denmark) தேசத்துக்குத் தப்பியோடிப்போனான்.

எதிரிகள் தங்கள் கையில் சிக்கிய மேரியை எடின்பரோ நகருக்கு அழைத்துக் கொண்டுபோய், அங்கு ஓர் ஏரியின் நடுவிலிருந்த தீவில் கட்டப்பெற்றிருந்த லாக் லெவென் கற்கோட்டையில் (Lochleven Castle) சிறைப்படுத்தினார்கள்.

மேரி ஸ்டுவேர்ட் இராணி என்னும் பதவியை இழந்தாள். அவளுக்கு அப்போது ஜேம்ஸ் (James) என்று ஒரு வயது குமாரன் இருந்தான். ஸ்காத்லந்து நாட்டார் ஒன்றுகூடி அப்பாலகனுக்கு முடி சூட்டி, அவன் தக்க வயது அடையும் வரையில் அவனுக்குப் பதிலாக அரசியல் நடத்த எர்ல் ஆவ் மொரே (Earl Of Moray) என்பவனை நியமித்தார்கள்.

ஒரு வருஷம் சென்றது. சில பிரபுக்களின் உதவியால் எவரும் அறியாதவண்ணம் மேரி சிறையினின்றும் தப்பியோடினாள். அவள் தப்பியோடிய செய்தியைக் கேள்வியுற்ற எர்ல் ஆவ் மொரே, ஜேம்ஸ் அரசிளங்குமரனுக்கு ஆபத்து நேரிடா வண்ணம், சேனையொன்று திரட்டிக் கொண்டு அவளைச்சேர்ந்தவர்களை லாங் ஸைட் (Long Side) என்னுமிடத்தில் எதிர்த்தான்.

இருதிறத்தாருக்கும் முக்கால் மணி நேரம் கடும் போர் நிகழ்ந்தது. முந்நூறு சேனை வீரர்

இறந்துபட்டனர். மேரியைச் சேர்ந்தவர்கள் முறியடிக்கப் பெற்றனர். அரை மைல் தூரத்தில் ஒரு குன்றின்மீது நின்றவண்ணம் சண்டையைக் கவனித்துக் கொண்டிருந்த மேரி தன் பக்கம் அபஜயம் அடைந்ததை அறிந்து, தன் நண்பர் சிலருடன் அவ்விடத்தை விட்டு, அறுபது மைல் தூரம் தென் திசையை நோக்கி விரைந்து சென்று, கடற்கரை யடைந்து மீன்பிடிக்கும் படகொன்றில் ஏறிக்கொண்டு இங்கிலந்துக்குப் போனாள். அப்போது அந்நாட்டை ஆண்டுவந்த எலிஸபெத் (Elizabeth) இராணி தன்னை ஏற்றுக்கொண்டு ஸ்காத்லந்து நாட்டுக்கு மறுபடியும் அரசியாக நியமிப்பாள் என்று அவள் நம்பினாள்.

அநேக வருஷங்களுக்கு முன், தன் இளம் பிராயத்தில் மேரி ஸ்டுவேர்ட் இங்கிலந்து நாட்டுரிமையைப் பெற முயன்றாள்; அப்போது அந்நாட்டிலிருந்த ரோமன் காத்தலிக் மதஸ்தர் அவளுக்கு உதவி செய்ய எண்ணினர். உண்மையில், எலிஸபெத்துக்குப் பிறகு மேரி ஸ்டுவேர்ட் இங்கிலந்து நாட்டுரிமையை அடையத் தக்கவளே.

அவள் இங்கிலந்து தேசத்தைச் சேர்ந்ததும் அவளுடைய பரிதாபகரமான நிலைமையைக் கருதி, ஸ்காத்லந்து தேசத்திலும் இங்கிலந்துக்கு வடக்கேயும் இருந்த ரோமன் காத்தலிக் மதஸ்தர் அனை

வரும் அவளுடன் சேர்ந்து கொண்டனர். இங்கிலீஷ் பிரபுக்களுள் தலை சிறந்து விளங்கிய டியூக் ஆவ் நார்பக் (Duke of Norfolk) அவளை மணந்து கொள்ள விரும்பினர். அதனால், எலிஸபெத் இராணியின் உயிருக்கே ஆபத்து விளையும் போலிருந்தது.

ஒரு தினம் மேரி ஸ்டுவர்ட், எலிஸபெத் இராணியை அணுகி, "அக்காள்! உன்னை நம்பி நான் இங்கு வந்தேன். எனக்குற்ற துணை உன்னைத்தவிர வேறு எவருமிலர். நீ என்னை மறுபடியும் ஸ்காத்லந்துக்கு இராணியாக்க வேண்டும். அல்லது, பிரான்ஸ் நாட்டுக்குப் போக எனக்கு அநுமதி தர வேண்டும்." என்றாள்.

எலிஸபெத் :—மேரி!- ஸ்காத்லந்து தேசத்தார் உன்மீது சாட்டியுள்ள குற்றங்கள் யாவும் பொய்க் குற்றங்கள் என்று நீ ரூபித்தால், நான் உனக்கு உதவிசெய்யச் சித்தமாய் இருக்கிறேன்.

மேரி ஸ்டுவர்ட் :—நான் குற்றவாளி என்றும் குற்றவாளி அல்லள் என்றும் கூறுவதற்கு இவ்வுலகில் எவருக்கும் அதிகாரமில்லை. இங்கிலீஷ் நியாயாதிபதிகளோ இராணியாகிய என்னை விசாரணை செய்வது!

அவள் கூறிய மொழிகளைக் கேட்டதும் எலிஸபெத் மனம் நொந்தவளாய், "மேரி! நீ இவ்விதம் பிடிவாதத்துடன் பேசினல் நான் உனக்காக ஒன்றும் செய்வதில்லை. உன்னை நான் இந்நாட்டினின்றும் வெளிக்கிளம்ப விடேன்," என்றாள்.

அதனால், மேரி ஸ்டுவர்ட் இங்கிலாந்திலேயே தங்கி இருக்கும்படி நேரிட்டது.

இருபது வருஷங்கள் கடந்தன. மேரியின் நிலைமை மாறுதல் அடையவில்லை. அவள் இங்கிலாந்தில் எடுத்தடி வைத்த நாள் முதற்கொண்டு எலிஸபெத் இராணிக்கு விரோதமாக அநேக கலகங்கள் உண்டாயின.

இங்கிலந்துக்கு வடக்கில்வசித்துவந்தஇரண்டு பிரபுக்கள், மேரியை விடுவிப்பதற்கும் அவளுக்காக இலண்டன் நகரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கும் விரும்பி ஒரு பெருஞ் சேனையைத் திரட்டினர். அவர்களுடைய முயற்சி வீணாயிற்று. அவர்கள் இருவரும் உயிர் தப்பியோடினர். அவர்களைச் சேர்ந்தகலகக்காரர் நூற்றுக்கணக்காய் வெட்டுண்டு மாண்டனர்.

மேரி ஸ்டுவர்ட்டால் அக்கலகம் நேர்ந்தது என்று உணர்ந்த எலிஸபெத் அவளை எர்ல் ஆவ் ஷ்ரூஸ்பரி (Earl of Shrewsbury) என்னும் பிரபுவின் பாதுகாப்பில் விட்டு வைத்தாள். அங்கிருந்தவரையில் அவள் ஒவ்வொரு காரியத்தையும் சுயேச்சையாய் நடத்தி வந்தாள்; அவளைப் பலர் காண

வந்தனர்; அநேகர் அவளுக்குக் கடிதங்கள் வரைந்தனர்; அவளும் அவர்களுக்குப் பதில் கடிதங்கள் எழுதி வந்தாள்; அடிக்கடி வெளியிற் சென்று வேட்டையாடி வந்தாள்.

எலிஸபெத் இராணியைப் பிடித்துச் சிறையிலடைத்து மேரியை இங்கிலந்துக்கு அரசியாக்க அநேகர் முயற்சி செய்து வந்தனர். பலர் ஸ்பெயின் (Spain) தேசத்தரசனிடம் சென்று அவனுக்கு மேரியின் துன்பத்தை எடுத்துக் கூறி, அவளுக்கு உதவி செய்யும் பொருட்டு இங்கிலந்தைப் படையெடுத்துவர வேண்டிக்கொண்டனர். மேரியை இங்கிலந்துக்கு இராணியாக்கி ரோமன் காத்தலிக் மதத்தை நிலைநிறுத்த ஒரு சிலர் விரும்பினர். இவ்வாறு பலர் பலவிதமாகச் சதியாலோசனை செய்து வந்தனர்.

இங்கிலந்தில் நேர்ந்துள்ள மாறுதல்களை ஒற்றர் மூலமாய் அறிந்த எலிஸபெத்தின் உள்ளம் கொதித்தது. அவள் காலந்தாழ்த்தாமல் மேரியை ஸ்டாபர்ட் ஷையர் (Stafford Shire) மாகாணத்திலுள்ள டட்பரி (Tutbury) என்னும் கற்கோட்டையுள் இருத்தி ஸர் அமியஸ் பாலெட் (Sir Amyas Paulet) என்னும் பிரபுவைக் காவலாக வைத்தாள்.

இது நிற்க,

வால்சிங்காம் (Walsingham) என்பவரிடம் மேரிக்கு வந்த கடிதங்களும் அவள் பிறருக்கு எழுதிய கடிதங்களும் சிக்கின. அக்கடிதங்களிலிருந்து, "அந்தோனி பாபிங்டன் (Antony Babington) இங்கிலந்தில் அரசாங்க உத்தியோகம் வகித்திருந்த சிலருடன் சேர்ந்து எலிஸபெத்தைக் கொன்று மேரியைக் காப்பாற்றச் சதியாலோசனை செய்ததும் அதற்கு மேரி சம்மதித்ததும்" தெரிய வந்தன.

வால்சிங்காம் புத்தி சாதுர்ய முடையவர்; அவர் அவ்விஷயங்களை எவருக்கும் வெளிப்படுத்தாமல் அந்தோனி பாபிங்டன் என்பவனும் அவனைச் சேர்ந்தோரும் தங்கள் சதியாலோசனை சரிவர நிறைவேறுவதற்கான மார்க்கங்கள் தேடுவதைக் கூர்ந்து கவனித்து வந்தார். நாளுக்கு நாள், அவர்கள் செய்த ஏற்பாடுகள் முதிர்ந்து வந்தன. அவர் அவற்றைத் தடுக்க முயற்சி செய்து வந்தார்.

தாங்கள் செய்துவரும் சதியாலோசனை அரசாங்கத்தார் அறிந்துகொண்டனர் என்னும் விஷயத்தை எவ்விதமாகவோ அந்தோனி பாபிங்டன் உணர்ந்தான். அவனும் அவனைச் சேர்ந்தோரும் காலந்தாழ்த்தாமல் மாறுவேடம் பூண்டு லண்டன் நகரத்துக்கு வடக்கில் சிறிது தூரத்திலிருந்த ஓர் ஒதுக்கிடந்தேடி ஒளிந்து கொண்டனர்.

வால்சிங்காம் அச்சதியாலோசனைக்காரரைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களை விசாரணைசெய்து ராஜத்துரோகம் என்னும் குற்றத்துக்குட்படுத்தி அவர்களுக்கு மரண தண்டனை விதித்தார். அவர்கள் கொலையுண்டு இறந்தனர்.

இவ்விஷயங்கள் ஒன்றையும் அறியாது அச்சதியாலோசனைக்காரர் தன்னை எப்போது சிறையிலிருந்து மீட்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேரி ஸ்டுவர்ட்டைச் சில இங்கிலீஷ் போர்வீரர் டட்பரி கோட்டையுள்ளிருந்து அழைத்துக்கொண்டுபோய் பாத்திரிங்கே கோட்டையுள் (Fotheringay Castle) விடுத்தனர். அவள் எலிஸபெத் இராணியைக் கொலை செய்ய யத்தனித்ததாகக் குற்றம் சாட்டப்பெற்றாள். நாற்பத்தைந்து நியாயாதிபதிகள் அவளைவிசாரணைசெய்தனர்; அவளைக் குற்றவாளி எனத் தீர்மானித்தனர். அதன் பிறகு இங்கிலீஷ் பார்லிமெண்ட் (Parliament) என்னும் பிரதிநிதிச் சபையோர் எலிஸபெத் இராணியை அணுகி மேரி ஸ்டுவர்ட்டுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமென்றும் அவ்விதம் செய்யாமல் விட்டு விட்டால் இங்கிலந்துக்கே ஆபத்து நேரிடும் என்றும் வற்புறுத்தினர்.

முதன் முதல் எலிஸபெத் தயங்கினாள். மேரி ஒரு பெண்பால்; ஸ்காத்லந்துக்கு அரசி. அவளுக்கு மரண தண்டனை விதிப்பது கூடாத காரியம்

என்று தன் மனத்தில் நினைத்துக் கொண்டாள். "மேரி உயிருடன் இருக்கும் வரையில் தனக்கு ஆபத்து நேரிடும்" என்னும் உண்மையும் அவள் புத்திக்கு எட்டிற்று.

அதனால், எலிஸபெத் இறுதியில் மேரி ஸ்டுவர்ட்டுக்கு மரண தண்டனை விதித்தாள். கி. பி. 1587 ஆம் ஆண்டு பிப்ரவரி மீ 18 ஆம் தேதி புதன்கிழமை தௌர்ப் பாக்கியமான மேரி இராணி பாத்தரிங்கே கோட்டையில் வெட்டுண்டுமரித்தாள். அவள் சாகும்வரையில் தான் நிரபராதி என்று கூறிக் கொண்டே இருந்தாள்; தைரியமாகவும் சாந்தமாகவும் உயிர் துறந்தாள்.

இன்னும், "அவள் நிரபராதி, அவளைக் கொன்றது கொடும்பாதகம்" என்று பலர் கூறுகின்றனர். இங்கிலீஷ்காரருள் பெரும்பாலர், அவள் குற்றவாளி; அவள் வெட்டுண்டு இறந்தது நியாயம். அவளைக் கொன்றிராவிடில் எங்கள் சுவாதீனத்திற்குப் பங்கம் நேரிட்டிருக்கும் என்று கூறி அவள் இறந்தொழிந்ததற்காக மகிழ்ந்தனர்.

என்னே, விதியின் பயன்! மேரி இராணி இளம்பிராயத்திலிருந்து இருபது இருபத்தைந்து பிராயம் முடியும் வரையில் எவரும் பொறாமை கொள்ளத்தக்க நிலைமையில் இருந்து இன்பமாக வாழ்ந்தாள். அதன்பிறகு, அவளுக்கு அநேக

இடையூறுகள் உண்டாயின. ஆயினும், அவள் சமயோசித புத்தி வாய்ந்தவளாய் இருந்திருப்பின் அவ்விடையூறுகளைக் களைந்து யாதொரு கவலையுமின்றி அரசுசெலுத்தி வந்திருப்பாள்; அவளுக்கு அகால மரணமும் நேரிட்டிராது.விதியைத் தடுக்க எவரால் முடியும்!—

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்" அன்றோ!

முற்றுப்பெற்றது

Printed in Madras at the B. N. Press, Mount Road (P. O.)

எமது பதிப்புகள்

1.	நீதி கதா சாகரம் ...	0	5	0
2.	செந்தமிழ் நூன் மாலை ...	0	10	0
3.	விவேக விளக்கக் கதைகள் ...	0	5	0
4.	உலகம் புகழும் உத்தம மாதர் முதல் பகுதி ...	0	3	0
5.	ஷை இரண்டாம் பகுதி ...	0	3	0
6.	குருக்ஷேத்திர யுத்தம் ...	0	12	0
7.	பிரான்ஸ் கோவியா அல்லது பேராற்றல் வாய்ந்த பெண்மணி ...	0	5	0
8.	நவீன சித்திரக் கதைகள் (தெலுங்கு)	0	6	0
9.	சத்ரி ரத்னாகரம் (தெலுங்கு) ...	0	14	0
10.	பகவத் கீதை வசனம்—வரகவி-திரு- சி. சுப்ரமண்ய பாரதி எழுதியது	0	3	0
11.	விசித்திர விநோதக் கதைகள் ...	0	3	0
12.	யக்ஷ-தர்ம சம்வாதம் ...	0	1	0

பாடசாலை மாணவருக்கு வேண்டிய புத்தகங்கள் யாவும் விலை சரசமாய் எம்மிடம் கிடைக்கும்.

K. முனிசாமி நாயுடு & கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
286, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை.